ராம்கோ நிறுவனம் சார்பில்

# கொரோனா தடுப்பு பணிக்கு ரூ.5½ கோடி உதவி

ராஜபாளையம், ஏப்.4—

ராம்கோ சிமெண்ட்ஸ் நிறுவனம் கொரோனா வைரஸ் பரவலை தடுக்க தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, மேற்கு வங்காளம் மற்றும் ஒடிசா மாநில அரசு நிர்வாகங்களுடன் இணைந்து பணியாற்றி வருகிறது. ஆக்சிஜன் செறிவூட்டிகள் முதல் அதிநவீன பாதுகாப்பு உபகரணங்கள், குடிநீர், தங்குமிடம் மற்றும் உணவு போன்ற அடிப்படை வசதிகளுக்கு ஏற்பாடு செய்துள்ளது. தொழிற்சாலை வாகனங்களுக்கு கிருமி நாசினி தெளிக்கப்பட்டது. பணியாளர்கள் அனைவருக்கும் மருத்துவ பரிசோதனை செய்து வைரஸ் அறிகுறியில் இருந்து விடுபட்டவர் என சான்று வழங்கப்பட்டுள்ளது. முக கவசம், சோப்பு வழங்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகளை சுற்றியுள்ள கிராம வாசிகளுக்கும் மருத்துவர் குழுக்களால் முகாம்கள் நடத்தப்பட்டு குடிநீர் தொட்டிகளில் கிருமி நீக்கம் செய்து பொதுமக்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டது. நிறுவனத்துடன் நேரடி ஒப்பந்தத்தில் ஈடுபடாதவர்கள் உள்பட 6000—க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு உணவு, தங்குமிடம் மற்றும் மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. குடும்பங்களுடன் தங்கியுள்ள தொழிலாளர் முகாம்களுக்கு மளிகை மற்றும் காய்கறிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. வெளி மாநில தொழிலாளர்களுக்கு பண உதவி வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் கடுகூர், தாமரைக்குளம் மற்றும் ஒடிசாவின் ஹரிதாஸ்பூரில் தனிமை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் ரூ.3 கோடி மதிப்பில் பல்வேறு மாநில நிறுவனங்களுக்கான மருத்துவ உபகரணங்கள் 3 நாட்களுக்குள் வழங்கப்படஉள்ளது.

மேலும் ராம்கோ சிமெண்ட்ஸ் லிமிடெட் சார்பில் தமிழ்நாடு முதல்—அமைச்சர் நிவாரண நிதிக்கு ரூ.2½ கோடி வழங்கப்பட்டுள்ளது.

Scanned by CamScanner